# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

<u>ஆணை நாள் - **03.06.2025**</u>

**<u>முன்னிலை</u>**

## திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

## <u>வழக்கு எண். SA 5662/SCIC/2023</u>

திருமதி.க.மணிமேகலை, க/பெ.கலியராஜ் — மேல்முறையீட்டாளர்
பாபநாசம் தெரு
திருச்சினம்பூண்டி, பூதலூர் வட்டம்
தஞ்சாவூர் மாவட்டம்.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர் ....... பொதுஅதிகார அமைப்பு
வட்டாட்சியர் அலுவலகம்
பூதலூர் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.

## <u>ஆணை</u>

இவ்வழக்கின் விசாரணை ஏற்கெனவே 12/05/2025 அன்று ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்டு கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பித்திருந்தது.

> 4. **இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை. எனினும், மனுதாரர் 08/05/2025 தேதியிட்ட கடிதம் ஆணையத்திற்கு 12/05/2025 அன்று பிற்பகல் 01.05 மணிக்கு கிடைக்கப் பெற்றது. பொது அதிகார அமைப்பின் சார்பில், பொதுத் தகவல் அலுவலரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி திருமதி B.சரண்யா, முதுநிலை வருவாய் ஆய்வாளர், பூதலூர் வட்டம் அவர்கள் ஆஜராகி மனுதாரரின் 08/02/2023 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவிற்கு 29/03/2023 தேதியிட்ட கடிதம் வாயிலாக பதில் அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். மனுதாரருக்கு, பதில் அனுப்பப்பட்டிருந்தாலும், விசாரணை நிலுவையில் உள்ளதால் தகவல் அளிக்க இயலாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

5. விசாரணையின் போது, பொதுத் தகவல் அலுவலரின் பிரதிநிதி வருவாய் கோட்டாட்சியர், தஞ்சாவூர் அவர்கள் வட்டாட்சியர், பூதலூர் அவர்களை விசாரணை முடித்து அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவிட்டுள்ளார் எனத் தெரிவித்தார். மேலும், பொதுத் தகவல் அலுவலரின் பிரதிநிதி, வட்டாட்சியர், பூதலூர் அவர்கள் இன்னும் ஒரு வாரத்தில் விசாரணையினை முடித்து விடுவார் என உறுதி கூறினார்.

6. எனவே, வட்டாட்சியர், பூதலூர் வட்டம் அவர்கள் மேற்சொன்னவாறான விசாரணையினை இவ்வாணை கிடைக்கப் பெற்ற ஒரு வார காலத்திற்குள் முடித்து, அந்த விசாரணை அறிக்கையின் நகலை மனுதாரருக்கு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைப்பதோடு, அதன் பின்னர், மனுதாரருக்கு அனுப்பி வைக்கப்பட்ட விசாரணை அறிக்கையின் நகல் மற்றும் மனுதாரரிடமிருந்து பெறக் கூடிய அஞ்சல் ஒப்புகை அட்டையின் நகல் ஆகியவற்றை வட்டாட்சியர், பூதலூர் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம் அவர்கள் 03/06/2025 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. இவ்வழக்கின் விசாரணை, ஆணையத்தால் 03/06/2025-க்கு ஒத்தி வைக்கப்படுகிறது. ஆணையத்தின் அழைப்பாணை (1) மனுதாரர் (2) தலைமையிடத்து துணை வட்டாட்சியர் மற்றும் (3) வட்டாட்சியர், பூதலூர் வட்டம் ஆகியோருக்கு அனுப்பப்பட வேண்டும்.

2. மேற்குறிப்பிட்டவாறு, பொது அதிகார அமைப்பின் சார்பில் இன்று (03/06/2025) திருமதி / செல்வி. R.கலைச்செல்வி, வட்டாட்சியர் மற்றும் திருமதி / செல்வி. K.சாந்தி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், பூதலூர் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம் ஆகியோர் ஆஜரானார்கள். இன்றைய விசாரணையின் போதும், மனுதாரர் ஆஜராகவில்லை. ஆணையம் உத்தரவிட்டிருந்தவாறு, வட்டாட்சியர், பூதலூர் வட்டம் அவர்கள் விசாரணை அறிக்கையினை சமர்ப்பித்து, தெரிவிக்கையில், கிராம நிர்வாக அலுவலர் வாயிலாக மனுதாரருக்கு விசாரணை அறிக்கையின் நகலை கொடுக்க முற்பட்ட போது, மனுதாரர், அதனைப் பெற்றுக் கொள்ள மறுத்ததாகவும், எனவே, அவ்வறிக்கையினை 02/06/2025 அன்று ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் மனுதாரருக்கு அனுப்பியுள்ளதாகவும் தெரிவித்தார். ஆணையத்தின் உத்தரவு முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆணையத்தின் அழைப்பாணை அனுப்பப்பட்டு, நேரடி விசாரணையில் பங்கேற்று, தனது வாதுரையினை பதிவு செய்ய வாய்ப்பளிக்கப்பட்டும், இன்றைய விசாரணையில் மனுதாரர் பங்கேற்கவில்லை. ஏற்கனவே, முந்தைய 12/05/2025 தேதிய விசாரணையிலும் மனுதாரர் ஆஜராகவில்லை.எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.

ஒம்./-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)
மாநில தலைமை தகவல் ஆணையர்

//ஆணைப்படி//

உதவி பதிவாளர்

**<u>வழக்கு எண். SA 5662/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

1.பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்
பூதலூர் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.

2. வட்டாட்சியர்
பூதலூர் வட்டாட்சியர் அலுவலகம்
பூதலூர், தஞ்சாவூர் மாவட்டம்.

**மேல்முறையீட்டாளர்**

திருமதி.க.மணிமேகலை, க/பெ.கலியராஜ்
பாபநாசம் தெரு
திருச்சினம்பூண்டி, பூதலூர் வட்டம்
தஞ்சாவூர் மாவட்டம்.

RG/PC